மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பது எல். டி. லைன் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு மாத்திரம்தான் இப்பொழுது பயன்படுகிறது. சில கூட்டுறவு நீர் ஏற்று பாசன சங்கம் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு எச். டி. லைனிலிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு இந்த இலவச மின்சார சலுகை கிடைப்பதில்லை. அதிலேயும் சிறு, குறு விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள், அவர்களையும் சேர்த்து எல்லோருக்கும் இலவச மின்சாரம் வழங்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்பொழுது இருக்கின்ற நடைமுறையிலே, 650, 700 கோடி ரூபாய், என்று நஷ்டத்தை நாம் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை, மற்ற சலுகைகளை கொடுப்பதிலே இந்த அரசுக்கு உடன்பாடு கிடையாது. இந்தச் சலுகைகள் வேறு எதற்கும் தரப்பட மாட்டாது. இருக்கின்ற நிலையைத் தொடர்ந்து நடத்துவதிலே பல்வேறு சங்கடங்களை இந்த அரசு சந்தித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 290, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

290—

திருத்தணி அருகில் கந்தியாற்றின் குறுக்கே மேம்பாலம்.

*10468—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி அருகில் ஓடும் கந்தியாற்றின் குறுக்கே சென்னை சாலையில் மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் பணி துவங்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது திட்டம் எதுவும் இல்லை.

1993 ஏப்ரல் 8]

முற்பகல் 10-45

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரை ஒட்டி, வட்ட வடிவமாக கந்தியாறு என்ற காட்டாறு ஓடுகிறது. மழைக் காலங்களில் இந்தக் காட்டாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இப்படி வாரக் கணக்கில் சாலையின் இரு புறங்களிலும் தண்ணீர் ஓடுவதால், அங்கே வருகிற யாத்ரிகர்கள் வாரக் கணக்கில் அங்கேயே தங்க வேண்டிய துர்பாக்கியமான நிலை ஏற்பட்டு, அவர்கள் உணவுக்குக்கூட கஷ்டப்படும் நிலைமை ஏற்படுகிறது. எனவே, கந்தியாற்றின் குறுக்கே சென்னை சாலையில் மேம்பாலம் அமைத்துத் தந்தால், இந்த நிலைமையை முற்றிலும் சீர் படுத்த முடியும். எனவே, இந்த நிதி ஆண்டில் இல்லை என்றாலும், வருகிற நிதி ஆண்டிலாவது சிறப்பாகச் செயல் படுகிற பொதுப் பணித் துறை அமைச்சர், மரியாதைக்குரிய அருமை ஐயா அவர்கள் இதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் 'ஐயா' என்று குறிப்பிட்டது மரியாதைக்காக இருக்குமென்று நினைக்கிறேன். வயதைக் குறிக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நம் முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ $1\frac{1}{2}$ கோடி ரூபாய் தேவைப் படுகிறது. உயர் மட்டப் பாலம் வேண்டுமென்று சொல்லு கிறார்கள். ஏற்கனவே, அங்கே ஒரு தாம்போகி பாலம் இருக்கிறது. அந்தப் பகுதி போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதி என்பதை இந்த அரசு அறியும். நான் ஏற்கனவே, பல முறை சொல்லியிருக்கிறேன். எல்லா இடங்களிலும் பாலங்கள் கட்ட வேண்டுமென்று கேட்கும்போது, அத் தனைக்கும் ஒட்டுமொத்தமாக நாம் நிதி ஆதாரங்களைச் சேர்த்துத் தர முடியாது. இருந்தாலும், அந்தப் பகுதியி னுடைய முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு வெள்ளக் காலங்களில் அங்கே போக்குவரத்து பாதிக்கப்படுகிறது என்பதை இந்த அரசு அறியும். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுத்து எப்படியாவது அதைச் சேர்ப்பதற்கு அரசு பரி சீலித்துக் கொண்டிருக்கிறது. இருக்கின்ற நிதி ஆதாரங் களைப் பொறுத்து வருகின்ற ஆண்டுகளில் எப்படி அதைச் செயல்படுத்தலாம் என்பதை அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகிற நிதி ஆண்டிலாவது பரிசீலிக்கலாம் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே

தெரிவித்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, என்னுடைய அன்பு வேண்டுகோளாக, உடனடியாக அடுத்த நிதி ஆண்டில், தாமதமின்றி இதைச் செய்து தர முடியுமா? பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் பெருமகனாரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே, தெரிவித்திருக்கிறேன். எல்லோரும் இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்து $1\frac{1}{2}$ கோடி, 2 கோடிக்குப் பாலம் கட்ட வேண்டுமென்று ஒவ்வொரு தொகுதிக்கும் கேட்கும்போது, இந்த அரசுக்கு இருக்கும் சங்கடங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இதை அமைச்சர் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும், உடனடியாகக் கட்ட வேண்டும், உறுதிமொழி தரவேண்டும் என்று சொல்லி ஏதோ வாய் மொழியாக சொல்லிவிட்டுப் போவதில் பிரயோசனமில்லை. அதைச் செயல்படுத்த வேண்டும். ஆகவே, இருக்கின்ற நிதி ஆதாரங்களை பொறுத்து—நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். போக்குவரத்து அதிகமுள்ள பகுதி என்று—முன்னுரிமை அடிப்படையில் எவ்வளவு விரைவாக நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமோ அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 291, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

291—

காஞ்சிபுரம் நகராட்சியில் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

***10135.**—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகராட்சியின் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அதிகப்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.